**O.S. 124/ 2019 , 01.12.2021, 12.25 pm - 01.00 pm**

**வா.சா.1, ராமன், த/பெ.மாணிக்க முதலியார், வயது 71**

சாட்சி முதல் விசாரணை தொடர்ச்சியாக திரும்ப அழைக்கப்பட்டு, பிரமாணம் செய்யப்பட்டு, தொடர்ந்து குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

**1ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை:-**

இந்த நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.25/2014 நிலுவையில் உள்ளதா என்றால் உள்ளது. அந்த வழக்கில் என்னை குறுக்கு விசாரணை செய்துள்ளார்களா என்றால் ஆமாம். அந்த விசாரணையானது பி.வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது (மேற்படி ஆவணத்தை சாட்சியின் முகவரிக்காக குறியீடு செய்யப்படுவதாக பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் கூறினார்). 05.12.1985ல் கூர்சீட்டு எழுதியபோது 1ம் பிரதிவாதி இருந்தாரா என்றால் எழுதும்போது அவர் அந்த இடத்தில் இல்லை, ஆனால் பொது அதிகார பத்திரம் விவேகானந்தன் என்பவருக்கு கொடுத்துள்ளார். 1ம் பிரதிவாதி ஏன் இல்லை என்று சொன்னால் டெல்லியில் பணியில் இருந்தார். அந்த கூர்சீட்டில் எவ்வளவு காலத்திற்குள் பதிவு செய்துகொள்ள வேண்டும் என்ற காலவரையறை குறிப்பிடப்பட்டிருந்து என்றால் காலவரையறை குறிப்பிடப்படவில்லை அவரவர் பாகத்தை பதிவு செய்துகொள்ளும்படி குறிப்பிடப்பட்டிருந்தது. 31.03.1986-க்குள் பதிவு செய்துகொள்ள வேண்டும் என்றும், அவரவர் கடன்களை அவரவர்கள் தீர்த்துகொள்ள வேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளது என்று சொன்னால் எழுதியிருக்கும். ஏன் மேற்படி தேதிக்குள் பதிவு செய்துகொள்ளவில்லை என்று சொன்னால் ஆனந்தனும், முனிரத்தினமும் அசல் வழக்கு எண்.51/1991 வழக்கு திருப்பத்தூரில் தாக்கல் செய்ததால் நின்றுவிட்டது. அந்த கூர்சீட்டின் அடிப்படையில் அவரவர்கள் சொத்தில் அனுபவத்தில் உள்ளார்கள் என்று சொன்னால் இல்லை, முழு சொத்தும் என்னிடம் உள்ளது. நான் கூறுவது தவறு என்றும், பாகப்பிரிவினை கூர்சீட்டின் அடிப்படையில் அவரவர்கள் அனுபவித்து வந்தார்கள் என்று சொன்னால் சரியல்ல. அசல் வழக்கு எண்.25/2014ல் நாங்கள் கூர்சீட்டின்படி சொத்தை அனுபவித்து வருகிறோம் என்று குறிப்பிட்டுள்ளேன் என்று சொன்னால் சரிதான். ஆவண எண்.1098/1986படி நான் குப்புசாமிக்கு கிரையம் கொடுத்தேனா என்றால் இல்லை. 1665/2005 ஆவணத்தின்படி என்னுடைய மகளான ஜான்சிக்கு செட்டில்மெண்ட் செய்து வைத்தேனா என்றால் என்னுடைய பாகத்தை செய்து வைத்தேன். 1425/2008 ஆவணபடி என்னுடைய மகன் சேஷாத்திரிக்கு செட்டில்மெண்ட் எழுதி வைத்தேனா என்றால் கொடுத்துள்ளேன். 2637/2008 ஆவணத்தின்படி என்னுடைய மகன் சேஷாத்திரி பஜலூர் ரகுமானுக்கு கிரையம் கொடுத்தாரா என்றால் கொடுத்துள்ளார். 6036/2008 ஆவணத்தின்படி என்னுடைய மகளான மறுபடியும் செட்டில்மெண்ட் எழுதி வைத்தேன் என்றால் சரிதான். 6285/2008 ஆவணத்தின்படி என்னுடைய மகள் ஜான்சி பஜலூர் ரகுமானுக்கு கிரையம் செய்து கொடுத்தார் என்றால் சரிதான். 3079/2011 ஆவணபடி நானும், என்னுடைய மகள் ஜான்சியும் செல்லபாண்டியனுக்கு கிரையம் கொடுத்தோமா என்றால் கிரையம் கொடுத்தோம். 2011ல் நானும், என்னுடைய மகள் ஜான்சியும் சுமதி என்பவருக்கு கிரையம் கொடுத்தோம் என்று சொன்னால் சரிதான். நானும், என்னுடைய மகள் ஜான்சி, மகள் சேஷாத்திரி மற்றும் பிர்வின் சேர்ந்து சுசிலா என்பவருக்கு 1995ல் கிரையம் கொடுத்தோம் என்று சொன்னால் சரிதான். என்னுடைய அப்பா மாணிக்கம் என்று சொன்னால் சரிதான். அவர் எப்பொழுது இறந்தார் என்று சொன்னால் 1982ல் இறந்தார். நானும், தேவகியும்

சேர்ந்து செந்தில்குமார் என்பவருக்கு ஆவண எண்.3373/1997 படி கிரையம் செய்து கொடுத்தோமா என்றால் கொடுத்தோம். 1986ல் நான் என்னுடைய மனைவி பெயருக்கு செட்டில்மெண்ட 'பத்திரத்தின் மூலம் வீடு எழுதியுள்ளேன் என்றால் சரிதான். அந்த பாகம் எனக்கு எப்படி வந்தது என்றால் கூர்சீட்டின் மூலம் வந்தது. அந்த கூர்சீட்டின் எந்த அட்டவணைப்படி எனக்கு வந்தது என்றால் எனக்கு ஞாபகமில்லை. நான் என்னுடைய பாகத்தை 1,10,000/- கடனுக்காக விற்றுவிட்டேன், மற்றவர்கள் அவர்களுடைய பாகத்தை வைத்துள்ளார்கள். அந்த கடனை யார் ஏற்படுத்தியது என்றால் மாணிக்கம் பெற்ற கடனிற்கு நான் ஜாமின்தாரராக இருந்தேன் அதனால் தான் சொத்தை விற்று கொடுத்தேன். எந்த வருடம் கடன் வாங்கினார் என்று சொன்னால் பார்த்தால் தான் தெரியும். 1ம் பிரதிவாதிக்கு எந்த அட்டவணை சொத்து வந்தது என்றால் ஞாபகமில்லை. மற்றவர் பாகத்தையும் நான் விற்றுகொண்டு வருகிறேனா என்றால் இல்லை. 1ம் பிரதிவாதி எத்தனை வருடமாக ஊரில் இருக்கிறார் என்று சொன்னால் 10 வருடமாக செட்டியப்பனூரில் இருக்கிறார். அவருக்கு வந்த பாகத்தில் செட்டியப்பனூரில் இருக்கிறார் என்று சொன்னால் சரிதான். வழக்கு

சொத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் 162/2A ஆகும். அந்த வழக்கு சொத்து கூர்சீட்டின்படி 1ம் பிரதிவாதிக்கு ஒதுக்கப்பட்ட சொத்து என்று சொன்னால் அதில் 70 செண்ட் தான் 1ம் பிரதிவாதிக்கு ஒதுக்கப்பட்டது, ஆனால் அந்த கூர்சீட்டில் மாணிக்கம் பெற்ற கடனை தீர்த்துவிட்டுதான் எடுத்துகொள்ள வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. மாணிக்கம் பெற்ற கடனை நான் தீர்த்ததற்கான ஆவணம் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஞாபகமில்லை. முழு சொத்தும் மாணிக்கத்திற்கு உடையது என்று சொன்னால் சரிதான். வா.சா.ஆ.3 வரிசையில் உள்ள ஆவணங்கள் அனைத்தும் மாணிக்கம் மக்கள், ராமன் வகையறா என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் கூட்டுபட்டா என்பதால் அவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது. நான் விற்பனை செய்த சுசிலா என்பவரின் பெயரும் வா.சா.ஆ.2 ஆன கூட்டுபட்டாவில் வருகிறது என்று சொன்னால் சரிதான். விஸ்வநாதன், வசந்தா அவர்கள் பெயரும் வா.சா.ஆ.2ல் வருகிறது என்று சொன்னால் சரிதான், அவர்களுக்கு மாணிக்கம் தான் சொத்தை விற்றார். நான் காவல் நிலையத்தில் எப்பொழுது புகார் கொடுத்தேன் என்றால் 2019ஆம் வருடம், தேதி, மாதம் ஞாபகமில்லை. காவல்நிலையத்தில் ரசீது ஏதேனும் கொடுத்தார்களா என்றால் கொடுத்தார்கள், விசாரணை செய்து குற்றவியல் வழக்கு தொடுப்பதற்கான முகாந்திரம் இல்லாததால் உரிமையியல் நீதிமன்றத்தை அணுகும்படி கூறினார்களா என்றால் சிவில் நீதிமன்றத்திற்கு செல்லும்படி கூறினார்கள். நான் எனக்கு வந்த பாகத்தை விற்றுவிட்டு, 1ம் பிரதிவாதிக்கு வந்த சொத்தை விற்க முயற்சி செய்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. 1ம் பிரதிவாதிக்கு வந்த பாகத்தை நான் ஏற்கனவே விற்றுவிட்டேன் என்று சொன்னால் சரியல்ல. கூர்சீட்டில் இல்லாத சொத்துக்கள் குறித்து பாகப்பிரிவினை செய்ய் வேண்டியுள்ளதால் பாகப்பிரிவினை வழக்கு நிலுவையில் உள்ளது என்று சொன்னால் சரியல்ல. வழக்கு நிலுவையில் உள்ள பொழுது நான் விற்ற சொத்து மற்றும் செட்டில்மெண்ட் செய்த சொத்து செல்லாது என்று சொன்னால் சரியல்ல. 1ம் பிரதிவாதிக்கு வந்த சொத்தில் தென்னை மரங்கள் வைத்து பாதுகாக்க வேலி போட நான் தான் பிரச்சனை செய்தேன் என்று சொன்னால் சரியல்ல. 1ம் பிரதிவாதிக்கு வந்த சொத்தை அபகரிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. 1ம்

பிரதிவாதி நடமாட முடியாத நிலையில் உள்ளார் என்று சொன்னால் அவர் வீட்டில் உள்ளார். வழக்கு தள்ளுபடியாக வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

4ம் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.